1972 ஆகஸ்ட் 19]

(இ) கோடைக்கானல் நகரியம், மேற்கூறிய விடுதியின் முதலில் தயாரிக்கப்பட்ட வடிவமைப்பில் உள்ள அறைகள் தற்கால வசதிகளும், போதுமான காற்றோட்டமும் கொண்டிராது எனக் கருதப்பட்டதால் அந்த விடுதியின் வடிவமைப்பை மாற்றத் தீர்மானித்தது. அரசும் அந்த வடிவமைப்பு மாற்றத்திற்கு ஒப்புதல் அளித்தது. ஆயினும் அதற்கு தொழில் நுட்ப ஒப்புதல் பெறுதல், ஒப்பந்தப் புள்ளி கோருதல் முதலிய விதிமுறைகளை அனுசரிக்க வேண்டியுள்ளதால் கடனாக அளிக்கப்பட்ட ரூ. 1.5 இலட்சம் இன்னும் செலவிடப்படாமல் உள்ளது.

(உ) மேற்கூறிய முறைகள் முடிந்துவிட்டன. அனுசரித்தான பின் வேலை சீக்கிரம் தொடங்கப்பெறும்.

Railway Cess Fund

* 77 *Q.*—THIRU SAW GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the West Thanjavur District Development Council has requested the Government to utilise the Railway Cess Fund for establishing an Agricultural College in the district; and

(*b*) if so, the action proposed to be taken by the Government in the matter?

இரயில்வே செஸ் நிதி

திரு. சா. கணேசன் (திரு ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி ஒன்று ஏற்படுத்த இரயில்வே செஸ் நிதியைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு மேற்குத் தஞ்சாவூர் மாவட்ட வளர்ச்சிக் குழு அரசினை வேண்டிக் கொண்டதென்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு மேற்கொள்ளக் கருதியிருக்கும் நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.